# பெரியாழ்வார் திருமொழி 2-9
## வெண்ணெய்விழுங்கி
(வெண்ணெய் களவாடல் முதலிய பாலக்ரீடை வர்ணனம்)

202 * வெண்ணெய் விழுங்கி வெறுங்கலத்தை
வெற்பிடையிட்டு * அதனோசை கேட்கும் *
கண்ண பிரான் கற்ற கல்வி தன்னைக் *
காக்ககில்லோம் உன் மகனைக் காவாய் **
புண்ணில் புளிப்பெய்தால் ஒக்கும் தீமை *
புரை புரையால் இவை செய்ய வல்ல *
அண்ணற்கண்ணானோர் மகனைப் பெற்ற *
அசோதை நங்காய் உன் மகனைக் கூவாய் (1)

203 வருக வருக வருக இங்கே *
வாமன நம்பீ வருக இங்கே *
கரியகுழல் செய்யவாய் முகத்துக் *
காகுத்த நம்பீ வருக இங்கே **
அரியனிவன் எனக்கு இன்று நங்காய் *
அஞ்சன வண்ணா அசலகத்தார் *
பரிபவம் பேசத் தரிக்ககில்லேன் *
பாவியேனுக்கு இங்கே போதராயே (2)

204 திருவுடைப் பிள்ளை தான் தீயவாறு *
தேக்கம் ஒன்றுமிலன் தேசுடையன் *
உருக வைத்த குடத்தொடு வெண்ணெய் *
உறிஞ்சி உடைத்திட்டுப் போந்து நின்றான் **
அருகிருந்தார் தம்மை அநியாயம் செய்வது
தான் * வழக்கோ அசோதாய் *
வருகவென்று உன்மகன் தன்னைக் கூவாய் *
வாழவொட்டான் மதுசூதனனே (3)

205 கொண்டல் வண்ணா இங்கே போதராயே *
கோயிற் பிள்ளாய் இங்கே போதராயே *
தெண் திரைசூழ் திருப்பேர்க் கிடந்த *
திருநாரணா இங்கே போதராயே **
உண்டு வந்தேன் அம்மம் என்று சொல்லி *
ஓடி அகம்புக ஆய்ச்சி தானும் *
கண்டெதிரே சென்றெடுத்துக் கொள்ளக் *
கண்ணபிரான் கற்ற கல்வி தானே (4)

206 பாலைக் கறந்து அடுப்பேற வைத்துப் *
பல்வளையாள் என் மகள் இருப்ப *
மேலையகத்தே நெருப்பு வேண்டிச் சென்று *
இறைப்பொழுது அங்கே பேசி நின்றேன் **
சாளக்கிராமம் உடைய நம்பி *
சாய்த்துப் பருகிட்டுப் போந்து நின்றான் *
ஆலைக் கரும்பின் மொழி அனைய *
அசோதை நங்காய் உன்மகனைக் கூவாய் (5)

207 போதர் கண்டாய் இங்கே போதர் கண்டாய் *
போதரேன் என்னாதே போதர் கண்டாய் *
ஏதேனும் சொல்லி அசலகத்தார் *
ஏதேனும் பேச நான் கேட்க மட்டேன் **
கோதுகலமுடைக் குட்டனேயோ *
குன்றெடுத்தாய் குடமாடு கூத்தா *
வேதப் பொருளே என் வேங்கடவா *
வித்தகனே இங்கே போதராயே (6)

208 செந்நெலரிசி சிறுபருப்புச் *
செய்த அக்காரம் நறுநெய் பாலால் *
பன்னிரண்டு திருவோணம் அட்டேன் *
பண்டும் இப்பிள்ளை பரிசறிவன் **
இன்னமுகப்பன் நான் என்று சொல்லி *
எல்லாம் விழுங்கிட்டுப் போந்து நின்றான் *
உன்மகன் தன்னை அசோதை நங்காய் *
கூவிக் கொள்ளாய் இவையும் சிலவே (7)

209 கேசவனே இங்கே போதராயே *
கில்லேன் என்னாது இங்கே போதராயே *
நேசமிலாதார் அகத்திருந்து *
நீ விளையாடாதே போதராயே **
தூசனம் சொல்லும் தொழுத்தைமாரும் *
தொண்டரும் நின்ற இடத்தில் நின்று *
தாய் சொல்லுக் கொள்வது தன்மம் கண்டாய் *
தாமோதரா இங்கே போதராயே (8)

210 கன்னலில் அட்டுவத்தோடு சீடை *
காரெள்ளின் உண்டை கலத்திலிட்டு *
என்னகமென்று நான் வைத்துப் போந்தேன் *

இவன் புக்கு அவற்றைப் பெறுத்திப் போந்தான் **
பின்னும் அகம் புக்கு உறியை நோக்கிப் *
பிறங்கொளி வெண்ணெயும் சோதிக்கின்றான் *
உன்மகன் தன்னை அசோதை நங்காய் *
கூவிக் கொள்ளாய் இவையும் சிலவே (9)

211 சொல்லிலரசிப்படுதி நங்காய் *
சூழலுடையன் உன்பிள்ளை தானே *
இல்லம் புகுந்து என்மகளைக் கூவிக் *
கையில் வளையைக் கழற்றிக் கொண்டு **
கொல்லையில் நின்றும் கொணர்ந்து விற்ற *
அங்கொருத்திக்கு அவ்வளை கொடுத்து *
நல்லன நாவற் பழங்கள் கொண்டு *
நானல்லேன் என்று சிரிக்கின்றானே (10)

212 * வண்டு களித்திரைக்கும் பொழில் சூழ் *
வருபுனல் காவிரித் தென்னரங்கன் *
பண்டவன் செய்த கிரீடை எல்லாம் *
பட்டர்பிரான் விட்டுசித்தன் பாடல் **
கொண்டிவை பாடிக் குனிக்க வல்லார் *
கோவிந்தன் தன் அடியார்களாகி *
எண் திசைக்கும் விளக்காகி நிற்பார் *
இணையடி என் தலை மேலனவே (11)